பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஹு ஆவணி மீ 16 உ சனிக்கிழமை (01-09-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 11 கதிர்: 182

# முல்லை முகாமைக் கைப்பற்ற

# புலிகள் தொடர்ந்து தாக்குதல்!

## உணவு போடும் முயற்சியும் பலிக்கவில்லை

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 1

முற்றுகையிடப்பட்டிருக்கும் முல்லைத்திவு இராணுவ முகாமைக் கைப்பற்றுவதற்காக விடுதலைப் புலிகள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருவதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதேசமயம் முகாமிற்குள் இருக்கும் படையினருக்கு உணவு போட விமானப் படையினர் எடுத்த முயற்சி பலிக்கவில்லை என்றும் தெரியவந்தது.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்களை அடுத்து முகாமைச் சூழவுள்ள பகுதிகள் மீது நேற்றுக் காலை 8 மணிமுதல் 10 மணிவரை தொடர்ந்து 'அவ்ரோ' விமானத்திலிருந்து பீப்பாய்க் குண்டுகள் வீசப்பட்டன.

இதன் பின்னர் நேற்று நண்பகல் 11 மணிமுதல் 12 மணிவரை முகாமுக்கு உணவு போடும் முயற்சியில் அவ்ரோ விமானம் ஈடுபட்டது.

இதேபோன்று நேற்று முன்தினம் விமானத்திலிருந்து முகாமுக்கு போடப்பட்ட 14 பொதிகளில் 13 பொதிகள் முகாமுக்கு வெளியே வீழ்ந்ததாகவும் —

தங்களால் கைப்பற்றப்பட்ட இந்தப் பொதிகளில் மருந்தும் உணவு வகைகளும் இருந்ததாகவும் —

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## கோட்டைச் சிப்பாய்களை மீட்கும் முயற்சி தோல்வி

கொழும்பு, செப். 1

யாழ்ப்பாணம் கோட்டையிலிருந்து. காயமடைந்த படையினரை மீட்க எடுத்த முயற்சி தோல்வி அடைந்து விட்டதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்திருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை இதற்காக அரசுப் படைகள் மேற்கொண்ட முயற்சியை விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல் நடத்தி முறியடித்து விட்டனர் என்று அவர்கள் தெரிவித்ததாக ஏஜென்சிச் செய்திகள் நேற்றுத் தகவல் வெளியிட்டன. (அ-எ)

## உணவு பொருள்களின் விலை இறங்கத் தொடங்கியது

யாழ்ப்பாணம், செப். 1

யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருள்களின் விலைகள் வீழ்ச்சியடைந்தன.

குறைந்த விலையில் விற்பனையாகும் பொருள்களை வாங்க மக்கள் முண்டியடித்து கடைகளில் கூடினர்.

கொழும்பில்இருந்து லொறிகளில் உணவுப் பொருள்கள் எடுத்து வரப்பட்டமையும் —

வவுனியா பூந்தோட்டக் குளச் சந்தையில் உணவுப் பொருள்கள் தாராளமாக வந்துசேர்ந்தமையுமே யாழ்ப்பாணத்தில் பொருள்களின் விலை வீழ்ச்சியடையக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று சீனி ஒரு கிலோ 40 ரூபாவாகவும், மா ஒரு கிலோ 30 ரூபாவாகவும், அரிசி ஒரு கிலோ 30 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டதை அவதானிக்க முடிந்தது. (உ-3-5)

★ காயமுற்றோரை மீட்க

## செஞ்சிலுவை சங்கத்துக்கு அரசு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், செப். 1

ஊர்காவற்றுறை, வேலணைப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளின் போது காயமுற்ற பொதுமக்களை மீட்பதற்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அங்கு செல்ல முயன்றது. ஆனால் பாதுகாப்பு அமைச்சு அதற்கு அனுமதி மறுத்ததை அடுத்து செஞ்சிலுவைக் குழு தனது

[4 ஆம் பக்கம் பார்க்க]

## 'அவ்ரோ' குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், செப். 1

கோட்டைக்கு உணவு போடும் "அவ்ரோ" விமானம் தனது வழமையான "பணியை" கைவிட்டுவிட்டு நேற்று மாலை மீண்டும் குண்டு வீச்சில் ஈடுபட்டது.

நேற்று மாலை 4.15 மணியளவில் வந்த அந்த "அவ்ரோ" மானிப்பாய், ஆனைக்கோட்டைப் பகுதிகளை முதலில் வட்டமிட்டது. பின்னர் நகருக்கு வந்து "பீப்பா"

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தில் போர்நிறுத்தம் உருவாக இந்தியா முயற்சிக்கவேண்டும் -கலைஞர்

மதுரை, செப். 1

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே, போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த இந்திய மத்திய அரசு முயற்சிகள் எடுக்கவேண்டும்.

தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்று மதுரையில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

இரு தரப்பினருக்கும் இடையே பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. கருணாநிதி கேட்டுக்கொண்டார்.

தமிழகத்தில் தங்கிஇருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு அவர்கள் தங்கி இருக்கும் இடங்களிலேயே வேலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

பட்டினிச் சாவில் இருந்து காப்பாற்றக் கோரி

## யாழ். அன்னையர் முன்னணி ஊர்வலம் நடத்த முடிவு

யாழ்ப்பாணம், செப். 1

நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை ஊர்வலம் ஒன்றை நடத்துவதற்கு யாழ். மாவட்ட அன்னையர் முன்னணி முடிவு செய்துள்ளது.

ஊர்வலத்தின் இறுதியில் யாழ். அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட இருக்கிறது.

பொருளாதாரத் தடையை நீக்கி தமிழ்ப் பகுதிகளிலுள்ள மக்களைப் பட்டினிச்சாவிலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் நேற்றும் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், செப் 1

வடமராட்சிப் பகுதியில் நேற்று மாலை 6 மணியளவில் பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

நான்கு பொம்மர்களும் 2 ஹெலிகளும் நெல்லியடி, பருத்தித்துறைப் பகுதிகளை வட்டமிட்டே இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டன.

மூன்று குண்டுகள் திக்குதிக்காக விழுந்து வெடித்தன சேத விபரம் தெரியவரவில்லை. (இ)

## தமிழகத்துக்கு அகதிகளாகச் செல்ல விரும்பி

# பேசாலையில் அலையும் 150 குடும்பங்கள்!

## ஆண்களை கடற்படை தடுத்துவைத்ததால் அவதி!!

— உதயன் வவுனியா மாவட்டச் செய்தியாளர் —

வவுனியா, செப். 1

தமிழகத்துக்கும் செல்ல முடியாமல் தமது சொந்த இடத்துக்கும் திரும்ப முடியாமல் ஐந்துதமிழ் மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 150 குடும்பங்கள் பேசாலையில் அவதியுறுகின்றன! வாழ்க்கை வெறுத்து விரக்தியின் விளிம்பில் நாட்களை நகர்த்துகின்றன!!

இவர்கள் தமிழகத்துக்கு அகதிகளாகச் செல்ல முயன்று கடலில் ஸ்ரீலங்கா கடற்படையினரிடம் சிக்கியவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்துக்கு சென்று—

பின்னர் அங்கிருந்து கொழும்புத்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் இருந்து தமிழகத்துக்கு அகதிகளாக வள்ளங்களில் பயணம் செய்துகொண்டிருந்த வேளை மன்னார் கடற்பகுதியில் பலர் கடற்படையிடம் சிக்கினர்.

அவர்கள் தலைமன்னார் கடற்படை முகாமுக்குஅழைத்துச் செல்லப்பட்டு ஆண்கள் பலர் தடுத்துவைக்கப்பட்டுள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நேற்று மட்டும் 1,300 அகதிகள்

சென்னை, செப். 1

நேற்றும் ஆயிரத்து முந்நூறு இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் போய்ச் சேர்ந்தனர். (ஒ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### மலிவு விற்பனை
V. K. M. Farm

எம்மிடம் புறொயிலர்ஸ் இறைச்சிக் கோழி என்பன மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். சில்லறை விலை (50/-) தொடர்பு 12, கனகசபை லேன், (யாழ்/ இந்துக் கல்லூரி பின்பக்கம்) யாழ்ப்பாணம்.

[13932]

### தகவல் தரவும்

கல்முனை பிரதேசசபையில் கணக்குப்பதிவுனராகக் கடமையாற்றும் ஆ. இரங்கநாதன் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து 465 நாவலர் வீதி, அரியாலை என்ற முகவரிக்கு தகவல் தரவும் - மனைவி.

[[13931]

### மீரா வெளியீடுகள்

வீரகேசரி பிரசுரங்களில் எழுதிய தலை சிறந்த எழுத்தாளர்களின் நாவல்கள் 100/- ரூபாவுக்குப் புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்குப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், ஸ்ரீகாந்புத்தகசாலை நல்லூர் கோவில், முன்புறம்.

[14121]

---

போக்குவரத்து துண்டிப்பால்

# பட்டினியை எதிர்நோக்கும் தீவுப்பகுதி மக்கள்

யாழ்ப்பாணம், செப். 1

தீவுப்பகுதிக்கான தொடர்புகள் யாவும் கடந்த ஒரு வார காலமாக முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளன.

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு ஆகிய தீவுகளுக்கான போக்குவரத்துப் படகு சேவைகள் கடந்த ஒருவாரமாக நடைபெறவில்லை.

அப்பகுதிக்குச் செல்ல வேண்டிய 150 பிரயாணிகள் குறிகட்டுவானில் நிர்க்கதி நிலையில் உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை படகுச்சேவை தடைப்பட்டுள்ளதால் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு மக்கள் பட்டினியை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த நிலையை நீக்க உடனடியாக உணவுப் பொருள்களை அங்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு தீவுப் பகுதி செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதி யாழ்- கிளையிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

(இ-3)

## தேங்காயுடன் சென்றவரும் மரணம்

பச்சிலைப்பள்ளி, செப். 1

முகமாலையிலிருந்து நெல்லியடிச் சந்தைக்கு தேங்காய் கொண்டு சென்றவரும் நெல்லியடியில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலில் மரணமடைந்தார்.

முகமாலை, சுடலைப்பிட்டியைச் சேர்ந்த நாகராசா ஆனந்தரவி (வயது 20) என்பவரே மரணமானவர் ஆவார்.

(இ-117)

நிர்வாக சேவை:

## பயிற்சிக்கு கொழும்புக்கு செல்ல முடியாத நிலைமை

திருநெல்வேலி, செப். 1

ஸ்ரீலங்கா நிர்வாக சேவைக்கு நடாத்தப்பட்ட பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. இப்பரீட்சையில் இரண்டு தமிழர் வெளிவாரியாக சித்தி அடைந்துள்ளனர்.

இதே நேரம் இப் பரீட்சை பெறுபேறுகள் யாழ்ப்பாணத்தில் கிடைக்கவில்லை. ஆனால் இச்சேவைக்கு பயிற்சி கொழும்பில ஆரம்பமாகிவிட்டது.

இப்பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து பெரும் எண்ணிக்கையானவர்கள் விண்ணப்பித்தபோதிலும் நாட்டு நிலைமை காரணமாக ஒரு சிலரே கொழும்பில் பரீட்சைக்குச் சென்றிருந்தனர்.

(இ-143)

## தாதியர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 1

மானிப்பாயில் இயங்கும் போதனா வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைப் பிரிவில் கடமை புரியும் பெண் தாதியர்களையும்- ஏனைய தாதியர்களையும் கடமைக்கு வருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வேண்டுகோளை வைத்தியசாலைப்பாதில்பணிப்பாளர் டாக்டர் செல்வி கனகரத்தினம்விடுத்துள்ளார்.

[ஒ-5]

## வவுனியா விஜயம்

யாழ்ப்பாணம், செப். 1

வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்ற சேதங்கள் குறித்து ஆராய்வதற்காகச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் குழு ஒன்று நேற்று முன்தினம் அங்கு விஜயம் செய்தது.

இடம் பெயர்ந்த மக்களும் அப்போது நகருக்கு வந்து தமது வீடுகளைப் பார்த்துச் சென்றனர்.

மக்கள் நகருள் வர அன்று மட்டுமே படையினர் அனுமதித்தனர் என்று கூறப்படுகிறது.

(இ-3-ரி)

# தமிழக அகதி முகாம்களில் வெளியே செல்லக் கட்டுப்பாடு

— இராமேஸ்வரத்திலிருந்து உதயன் சிறப்புச் செய்தியாளர் —

இராமேஸ்வரம், செப்.1

தமிழக அரசு ஈழத் தமிழ் அகதிகளுக்கு உதவுவதற்கு வேண்டியவசதிகளைச் செய்து கொடுககிறது. ஆனால் அகதி முகாம்களுக்குப் பொறுப்பாக உள்ள அதிகாரிகள் பல கட்டுப்பாடுகளை விதிக்கிறார்கள். அதனால் சில வேளைகளில் நாம் சிறையில் வாடுகிறோம் என்ற உணர்வு எங்களை அறியாமலே ஏற்படுகிறது.

இவ்வாறு தெரிவித்தார் மதுரை கபிலர் மண்டப முகாமில் தங்கியுள்ள அகதிகளில் ஒருவரான பி. மயில்வாகனம் என்பவர்.

இவர் அரியாலையைச் சேர்ந்தவர் யாழ்ப்பாணத்தில் தொண்டர் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்தவர். படகு மூலம்கடந்தமாதம் 4 ஆம்திகதி அகதியாக இராமேஸ்வரம் வந்து சேர்ந்தார்.

அகதி முகாமில் உள்ள வசதிகள், குறைபாடுகள் குறித்து உதயன் செய்தியாளர் திரு. மயில்வாகனத்திடம் கேட்டபோது அவர் சொன்னார்.

படகிலிருந்து இறங்கியதும் இராமேஸ்வரத்திலுள்ள அகதிகள் பதிவுக் கூடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கு வரிசையில் நின்று பதிவு மேற்கொண்டபின், இலவச உணவு வழங்குமிடத்திற்குஅனுப்பினார்கள். அங்கு நீண்ட வரிசையில் மக்கள் நின்றனர். அதனால் வெளியே சென்று சாப்பிட்டுவிட்டு வர அனுமதி கோரினேன். அனுமதி மறுக்கப்பட்டது. கியூவில் நின்று மாலை 4 30 மணியளவில் எமக்கான மதிய உணவை பெற்றுக் கொண்டோம். பிள்ளைக்கு உணவு வாங்கவும் நாம் வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஆனால் அந்த வாசல் காவல்காரருக்கு 10 ரூபா கொடுத்திருந்தால் வெளியே செல்ல அனுமதி கிடைக்கும் என பின்னர் அறிந்தேன்.

மாலையில் நாம் எங்கு செல்ல விரும்புகிறோம் என்று கேட்கப்பட்டது. நான் மதுரை செல்ல விரும்புவதாகச் சொன்னேன். அங்கே எனது உறவினருடன் தங்க [illegible] சொன்னேன். மாலையில் பஸ் ஒன்றில் ஏற்றி மதுரைக்கு செல்ல விரும்பிய அனைவரும் அனுப்பப்பட்டோம். வழியில் பஸ் எந்த இடத்திலும் நிறுத்தப்படவில்லை. இடையில் சிறுநீர் கழிக்க பஸ்ஸை நிறுத்தும்படி அகதி ஒருவர் கண்டக்டரை கேட்டார் அதற்கு கண்டக்டர் யோவ் கம்மின்று இருய்யா, சலம் விட்றேனு சொல்லிட்டு நீ பாட்டுக்கு ஓடி போயிட்டா நா கணக்கு குடுக்க யாரைப் புடிக்கிறது' என்று திட்டினார்.

### ஒவ்வொரு அறை

காலையில் அனைவரும் மதுரையில் உள்ள கபிலர் திருமண மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு இறக்கப்பட்டோம் அங்குள்ள கலக்டர் எம்மை பொறுப்பேற்றார். பின்னர் எமக்கு அறைகள் ஒவ்வொன்று ஒதுக்கப்பட்டது. ரேஷன் கார்டும் தரப்பட்டது.

,எம்மை வெளியே விடுங்கள் நாம் போய் எமது உறவினருடன் தங்குகிறோம்' என்று நாம் கேட்டோம் அவர் அதற்கு அனுமதிக்க முடியாது என்றார். தாம் அந்த ஊர் பொலீசுடன் தொடர்பு கொண்டு எமது உறவினர் பற்றியும், தங்குவதற்குஉள்ள வசதிகள் பற்றியும் விசாரித்த பின்னர் சொல்வதாகக் கூறினார்.

தொடர்ந்து எமது அறைகளில் நாம் முடங்கினோம். குடும்பத்தலைவருக்கு 5ரூபா, 2வது ஆளுக்கு 4 ரூபா, பிள்ளைகளுக்கு வயதுப் பிரகாரம் என்ற படி பணம் வழங்கப்படும் ரேஷனுக்கு 56 சதத்திற்கு அரிசியும், 2 ரூபா 6 சதத்திற்கு மண்எண்ணையும் என்பன வழங்கப்படும்.

இவற்றை வாங்க ஒரு நாளைக்கு ஒரு தடவை மட்டுமே வெளியே செல்ல அனுமதிக்கப்படும் அதுவும் போகும் போது வெறும் பை ஒன்றுடன் சென்று பொருட்கள் வாங்கி வர வேண்டும் குடும்ப உறுப்பினர் எவரும் கூட வர முடியாது.

சென்னைக்குச் செல்ல பல தடவை அனுமதி கேட்டேன். அனுமதி மறுக்கப்பட்டது. தகுந்த காரணம் தெரிவிக்கப்படவில்லை என்று கூறப்பட்டது. இறுதியில் 18ஆம் திகதி ஆயிரம் கேள்விகளின் பின் அனுமதி வழங்கப்பட்டது. 20ஆம் திகதி மாலையில் முகாமிற்கு திரும்பிவிட வேண்டும் என்றும், இல்லாவிடில் பொலீசிற்கு அறிவிக்கப்படும் என்றும் சொல்லப்பட்டது.

எனது உறவினர் வீட்டில் தங்குவதற்காவது அனுமதியுங்கள் எனக் கேட்டேன் ஆனால் இன்னும் பதில் வரவில்லை என்று சொல்லப்பட்டது.

இராமேஸ்வரம் தங்கச்சிமடம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் பின்னர் கட்டுப்பாடுகள் அதிகரித்துள்ளன— என்றார்.

(அ)

> வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நடக்கும் ஆயுதப்படைகளின் தாக்குதலைத் தொடர்ந்து இதுவரை 95, 000 க்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.
>
> அவர்களுக்குப் பல வசதிகளையும் செய்வதற்காக தமிழக அரசு பல லட்சம் ரூபா பணத்தை ஒதுக்கியுள்ளது.
>
> அகதிகளுக்கு உணவு, உடை மட்டுமன்றி கடன் வசதி, சுயதொழில் வாய்ப்பு, பிள்ளைகளுக்குக் கல்வி வசதி என்பனவற்றைச் செய்து கொடுக்கவும் மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.
>
> இப்படி எத்தனை வசதிகளைச் செய்தாலும் எங்கும் எதிலும் சில குறைபாடுகளும் இருப்பது வழக்கம்.
>
> அந்த வகையில் ஈழத் தமிழ் அகதி ஒருவர் இப்படி ஒரு குறைபாட்டைத் தெரிவித்தார்,

---


## முக்கிய அரசாங்க அறிவித்தல்

சலரோகத்திற்கான ஊசி மருந்து (Insulin) ஏற்பு தடுப்பூசி [Tetanus Toxoid), விசர்நாய் கடிக்கான தடுப்பூசி [ARV) மற்றும் அவசர தேவைக்கான மருந்துகளை எமது மருந்துக் களஞ்சியத்தில் உடனடியாக பெற்றுக் கொள்ளும்படி சகல அரச வைத்திய நிறுவனங்களின் பொறுப்பாளர்களையும் வேண்டிக் கொள்கிறேன். இம் மருந்துக் களஞ்சியம் எல்லா நாட்களிலும் (சனி, ஞாயிறு உட்பட] 9. 30 தொடக்கம் 11. 30 வரை திறந்து வைக்கப்பட்டிருக்கும்.

மேற் கூறிய நோய்களினால் பீடிக்கப்பட்டோர் தங்களுக்கு அண்மையிலுள்ள வைத்தியசாலையில் இம் மருந்துகளை பெற்றுக் கொள்ளவும்.

டாக்டர் ந. கனகசபை.
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்.
யாழ்ப்பாணம்.

(சி-5180)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### தங்கராசா சுதாகரன்
### (வீரவேங்கை லெப்டினன்ட் றஜீவன்)

| வீர ஜனனம்: | வீரமரணம்: |
|---|---|
| 07 - 01 - 1971 | 01 - 09 - 1989 |

அன்பின் செல்வமே! மண்ணை மீட்க விளைந்த வேளையில் விண் புகுந்த வீரவேங்கையே! எம்மைப் பிரிந்து ஆண்டு ஒன்று சுதா எத்தனை ஆண்டு சென்றாலும் உம்மை மறக்க எம்மால் முடியாது மகனே! என்றும் உன் நினைவு பீறிட்டு வருகின்றது எத்தனையோ சுக போகத்துடன் வாழ வசதி இருந்தும் எல்லாவற்றையும் வெறுத்து வீசிவிட்டு தமிழீழம் காணப் புறப்பட்டாய் உனது எண்ணம் நிறைவேற இறைவனை வேண்டி உம்மோடு முல்லைத்தீவில் வீர மரணம் அடைந்த தோழர்களுக்கும் எமது கண்ணீர் புஷ்பங்களை காணிக்கையாகச் செலுத்துகின்றோம்.

மறவாமல் மனமுருகும்:

அப்பா, மம்மி, அன்புச்சோதரங்கள்,
பெரியமாமா மற்றும் உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

அச்சுவேலி வடக்கு,
01-09-1990.

[14120]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற தூதுக் குழுவை இந்தியா விரைவில் அனுப்பும்

## அனைத்து ஏற்பாடுகளும் துரிதம் ராஜ்ய சபையில் அமைச்சர் தகவல்

புதுடில்லி, செப். 1

இலங்கையில் தமிழர் நிலைவரம் குறித்து நேரிற் போய் அறிந்து கொள்ள நாடாளுமன்றத் தூதுக்குழு ஒன்றை இந்திய அரசு இலங்கைக்கு விரைவில் அனுப்பும்.

இந்திய வெளியுறவு இணை அமைச்சர் ஹரிகிஷன் சிங் ராஜ்ய சபையில் கடந்த வியாழன் இதனை அறிவித்தார்.

இந்திய நாடாளுமன்றக் குழு இலங்கை செல்வதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன என்றும் இணை அமைச்சர் சொன்னார்.

இலங்கையில் அகதி முகாம்களை அமைப்பதற்கான இடங்கள் ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ளன என்றும் இந்த விஷயத்தில் இயன்ற உதவிகள் அனைத்தையும் இந்தியா அளிக்கும் என்றும் அவர் சொன்னார்.

இலங்கையில் தமிழர்கள் கண்ணியத்துடன் வாழும் வகையில் இலங்கை அரசு அதிகாரங்களை பகிர்ந்தளிக்க வேண்டும் என்றும்—

வடக்கு-கிழக்கு மாகாண நிலைவரத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் மேற்கொண்டுள்ள கடுமையான நிலை காரணமாக தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர் என்றும்—

மக்கள் நெருங்கி வாழும் பகுதிகளில் குண்டுகள் வீசப்பட்டுள்ளதால் ஏராளமான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும்— இணை அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கைப் பிரச்சினைக்குப் பேச்சுக்கள் மூலம் தீர்வு ஏற்படுவதையே இந்தியா விரும்புகிறது என்றும் இணை அமைச்சர் சொன்னார்.

இலங்கைத் தமிழரைப்பாதுகாக்க இந்தியா இயலுமான நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ள வேண்டும் என்று ராஜ்யசபை மத்திய அரசாங்கத்தைக் ஏகமனதாக கேட்டுக் கொள்வதாகவும்—

இது இலங்கை அரசுக்கும் தெரிவிக்கப்படவேண்டும் என்றும் சபைத் துணைத் தலைவர் திருமதி நஜிமா ஹெப்துல்லா இந்திய அரசைக் கேட்டுக் கொண்டார். (இ-எ)

## ஹெலி பறந்து வந்தது; சைக்கிளும் பறிபோனது!

யாழ்ப்பாணம், செப். 1

நிறைமாதக் கர்ப்பிணியான சகோதரியையும், அவரது 3 வயதுக் குழந்தையையும் சைக்கிளில் ஏற்றிவந்தார் சகோதரன். அந்தவேளையில் வந்தது ஹெலி ஒன்று. சைக்கிளை வீதியில் விட்டுவிட்டு மூவரும் பற்றைக்குள் ஓடி ஒளித்துக்கொண்டனர்.

ஹெலியின் இரைச்சல் ஓய்ந்ததும் வெளியே வந்தனர் அம்மூவரும். என்னே ஏமாற்றம்! சைக்கிள் அவ்விடத்தில் காணப்படவில்லை. அது மாயமாக மறைந்துவிட்டது.

அராலித்துறைப் பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சைக்கிள் பறிபோனதை அடுத்து, அவர்கள் அராலித்துறையில் இருந்து ஆனைக்கோட்டைக்கு நடையில் வர வேண்டியதாயிற்று. [ஓ-3-5]

## 35 பேர் தொடர்ந்தும் ராணுவத்தால் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம் செப். 1

மண்டைதீவில் தொடர்ந்தும் 35 அப்பாவிப் பொதுமக்கள் இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த 35 பேரில் அனேகமானோர்இளைஞர்கள்ஆவர்.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இராணுவத்தினரால் தடுத்து வைத்திருந்த சுமார் 600 முதல் 700 பேர் வரையானோர் விடுவிக்கப்பட்டு விட்டனர் என அறியவந்தது. (ஓ)

## வவுனியா நகரப்புற தமிழருக்கு வாராவாரம் நிவாரணம்

யாழ்ப்பாணம், செப். 1

வவுனியா மாவட்டத்தில் நகரை அண்டிய பகுதிகளில் வாழும் தமிழர்களுக்கு ஞாயிறு தோறும் நிவாரணம் வழங்கப்படுகிறது.

அதே வேளை - நகருக்கு வெளியே உள்ள வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு, செட்டிக் குளம், நெடுங்கேணி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகியவற்றில் உள்ளவர்களுக்கு ஒரு தடவை மட்டுமே நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் அந்தப் பகுதியில் வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். என்று புகார் கூறப்படுகிறது. (இ-3)

## முஸ்லிம்கள் இடம் பெயர்வு

யாழ்ப்பாணம், செப். 1

எருக்கலம்பிட்டி, விடத்தல் தீவு பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்கள் அங்கிருந்து இடம் பெயர்கின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள நிலமையே இதற்குக் காரணம்.

வெளியேறியோரில் பெரும்பாலானோர் கொழும்பு செல்கிறார்கள். [இ-3]

## சடலம் கரை ஒதுங்கியது

பச்சிலைப்பள்ளி, செப். 1

கிளாலி கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியது.

சடலம் பளை வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது. [இ-118]

## செம்மணியில் ஹெலிசூடு

நல்லூர்செம்மணிப்பகுதியில் வயல்களில் வேலைசெய்து கொண்டிருந்தவர்கள் மீது நேற்று முன்தினம் காலை ஹெலியில் இருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. (ஓ-எ)

## பச்சிலைப்பள்ளி பகுதிக்கு இடம் பெயரும் மக்கள்

பச்சிலைப்பள்ளி, செப். 1

சமீபத்தியசம்பவங்கள் காரணமாக கொழும்புத்துறை, அரியாலை பாஷையூர், குருநகர், நாவாந்துறை, கொட்டடி பகுதிகளைச் சேர்ந்த பலர் இடம் பெயர்ந்து பச்சிலைப்பள்ளியிலுள்ள இத்தாவில், கிளாலி, முகமாலை, புலோப்பளை பகுதிகளுக்கு வந்துள்ளனர்.

தேவாலயங்களிலும் உறவினர் வீடுகளிலும் இவர்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களில் பலர் முன்னர் இங்கு வந்து தங்கி தமது இருப்பிடங்களுக்கு திரும்பிச் சென்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது மீண்டும் இடம் பெயர்ந்து வந்துள்ளனர். (இ-117)

# விமானக் குண்டுக்கு அஞ்சி ஓடும் மக்களை ஹெலி சுட்டுக் கொல்கிறது

## நேரில்கண்டதை விவரிக்கிறார் அமெரிக்க செய்தியாளர்

சென்னை, செப். 1

''குண்டுவீச்சுக்கு பயந்து ஓடும் பொதுமக்கள் ஹெலிக்கொப்டர்களில் இருந்து சுட்டுக் கொல்லப்படுவதை நான் பார்த்தேன்''

இந்த வாரம் நான்கு நாட்கள் யாழ்குடா நாட்டில் தங்கியிருந்த அமெரிக்கச் செய்தியாளர் செல்வி ஜே எம்.ஏ. ஹாக்லி தனது அனுபவங்களை இப்படி வெளியிட்டிருக்கிறார்.

அவர் மேலும் கூறுவதாவது;

பூநகரியில் உள்ள பனந்தோப்பில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த ஒருவரை ஹெலிக்கொப்டரில் இருந்து சுட்டதை நான் அருகில் நின்று பார்த்தேன்.

என்னிடம் இருந்தசிறுகத்தியினால் அவரின் உடலில் பாய்ந்து இருந்த துப்பாக்கி ரவையை நான்அகற்றினேன். பின்னர் அவருக்கு நான் முதலுதவி செய்தேன்.

ஆனால் அந்த நபரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்கு எந்த விதமான வசதியும் கிடைக்கவில்லை.

யாழ்ப்பாண நகரம் வெறிச்சோடி பாலைவனமாகக் காட்சியளிக்கிறது''

இவ்வாறு செல்விஹொக்லி கூறினார். (இ-எ)

## மேலும் இரு கப்பல்கள்

யாழ்ப்பாணம் செப். 1

யாழ்-மாவட்டத்துக்கு அத்தியாவசியப் பொருள்களுடன் மேலும் இரண்டு கப்பல்கள் வரஇருப்பதாக யாழ் - அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்தார்.

திருகோணமலையில் இருந்து 450 தொன் மாவுடன் ஒரு கப்பலும் கொழும்பில்இருந்து 1500 தொன் அரிசி, சீனி ஆகியவற்றுடன் மற்றுமொரு கப்பலும் வர உள்ளன.

அடுத்தவார ஆரம்பத்தில் இந்தக் கப்பல்கள் வந்து சேரும் என தெரிவிக்கப்படுகிறது. (இ-3-ரி)

## மீண்டும் சேதம்

யாழ்ப்பாணம், செப். 1

சுன்னாகம் மின்சார நிலையம் வியாழன் காலை நான்காவது தடவையாக பொம்மரின் குண்டு வீச்சுக்கு உள்ளானது. (இ-143)

# உடைமைகளை இழந்து நிற்கும் மண்டைதீவு மக்கள்

யாழ்ப்பாணம், செப். 1

மண்டைதீவு இராணுவ முற்றுகையால் அந்தக் கிராம மக்கள் பலலட்சம் ரூபாபெறுமதியான உடைமைகளை இழந்து நிற்கிறார்கள். அவர்கள் தமது உடைமைகளை எடுக்க அனுமதி வழங்கப்பட வேண்டும்.

மண்டைதீவு மறுமலர்ச்சிக் கழகம் யாழ். செஞ்சிலுவைச் சங்கத்திடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

சென்ற திங்கட் கிழமை மண்டைதீவை முற்றுகையிட்ட இராணுவத்தினர் அங்கிருந்த 1,100 குடும்பங்களை சேர்ந்த மக்களை பலவந்தப்படுத்தி மண்கும்பான் கிராமம் நோக்கி விரட்டினர்.

தமதுஉடைமைகளை விட்டு உடுத்த உடுப்புகளுடன் அவர்கள் வெளியேறியுள்ளனர்.

அந்தக் கிராம மக்களின் பொருளாதார வளமான பல லட்சம் ரூபா பெறுமதியான புகையிலை அங்கு விடப்பட்டுள்ளன. மீனவர்களின் வலைகள், வள்ளங்கள் ஆகியனவும் உள்ளன.

இவற்றை அவர்கள் எடுத்து வர உதவவேண்டும்.

இப்படிக் கோரப்பட்டுள்ளது. [இ-3]

## உணவு விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 1

இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருள்களை விநியோகிக்கும் வேலையை ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம் முன்தினம் ஆரம்பித்தது.

கடந்த 22ஆம் திகதி முதல் மூடப்பட்டிருந்த சங்கத்தின் கிளைகள் திறக்கப்பட்டன. (ஓ-3-5)

## ஹெலியிலிருந்து சூடு

பச்சிலைப்பள்ளி, செப். 1

ஊரடங்கு வேளையில் கண்டி வீதியில் சென்ற வாகனம் ஒன்றை நோக்கி ஹெலியிலிருந்து சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

எழுதுமட்டுவாள் சந்திக்கருகில் கடந்த செவ்வாய்க் கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது. [இ-117]

## வீடுகள் இராணுவத்தால் எரிப்பு

யாழ்ப்பாணம், செப். 1

மண்டைதீவிலுள்ள வீடுகள் மற்றும் குடிசைகளை இராணுவத்தினர் தீயிட்டுக்கொளுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதன் கிழமை அன்று மண்டைதீவிலிருந்து வந்த ஒருவர் தாம் அங்கிருந்து [illegible] யாழ்ப்பாணம் புறப்படுகையில் மண்டைதீவின் ஒரு பகுதியில் தீ சுடர்விட்டு பெரும் பிழம்பாக எரிவதைக் கண்டதாகத் தெரிவித்தார்.

இராணுவம்முகாமிட்டுள்ள பகுதிகளிலுள்ள வீடுகள், குடிசைகள் [illegible] (ஓ)

# படையினர் புல்டோசர்கள் மூலம் வீடுகளை தரைமட்டமாக்குகின்றனர்

அராலி, செப். 1

மண்டைதீவிலும், அல்லைப்பிட்டியிலும் தமது பாதுகாப்புக்கு இடைஞ்சலாக உள்ள வீடுகளைப் படையினர் புல்டோசர் கொண்டு தரைமட்டமாக்கி வருகின்றனர்.

மண்டைதீவு - அல்லைப்பிட்டிப் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் வெளியேறும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

தாம் பிடித்துவைத்திருக்கும் பொது மக்களைக் கொண்டே படையினர் சமையல் செய்கின்றனர் என்றும் மக்கள் வெளியேறிய வீடுகளில் உள்ள கோழிகளும், கால்நடைகளும் படையினருக்கு உணவாகின்றன என்றும் அங்கிருந்து தப்பி வருபவர்கள் தெரிவிக்கின்றனர்.

அல்லைப்பிட்டி அலுமினியம் தொழிற்சாலையில் பிரதான முகாம் அமைத்துள்ள படையினர் பண்ணையை நோக்கிச் செல்லும் பிரதான வீதிப் பகுதிகள் தவிர்ந்த அல்லைப்பிட்டியின் ஒரு பகுதியையும் மண்டைதீவுக் கிராமப் பகுதிகளையும் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் உணவுப் பொருள் வாங்கி வர வசதி

## 'பெர்மிட்' முறை நீக்கப்பட்டது

வவுனியா, செப். 1
தனியார்துறை வர்த்தகர்கள் முயற்சி செய்தால் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு உணவுப்பொருள்களைக் கொண்டு செல்வதற்கு இப்போது வசதி ஏற்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் அனுராதபுரம், மதவாச்சி ஆகிய பகுதிகளில் இருந்து வவுனியாவுக்கு உணவுப் பொருள்களைக் கொண்டு வருவதற்கு இதுவரை அமுலில் இருந்த 'பெர்மிட்' முறை நீக்கப்பட்டு விட்டது.

அதனால் வவுனியா பூந்தோட்டப் பகுதியில் இயங்கும் குளச்சந்தைக்கு இப்போது ஏராளமான லொறிகள் நாளாந்தம் வருகின்றன.

வவுனியாவுக்கு அப்பால் இருந்து வரும் லொறிகளில் எரிபொருள், மெழுகுதிரி, தீப்பெட்டி, பட்டறி என்பன தவிர்ந்த ஏனைய பொருள்களைக் கொண்டு வருவதற்கு படையினர் அனுமதி வழங்குகின்றனர்.

இந்தப் புதிய சூழ்நிலையைப் பயன்படுத்தி உணவுப் பொருள்கள், குழந்தைகள் பாலுணவுகள், சைக்கிள் உபகரணங்கள் என்பவற்றை ஏற்றிக் கொண்டு நாளாந்தம் பல லொறிகள் வவுனியா குளச் சந்தைக்கு வருகின்றன.

இதனால் அரிசி, சீனி, குழந்தைகள் பாலுணவு மற்றும் கறிச்சரக்குகள் என்பவற்றின் விலைகள் பெருமளவில் வீழ்ச்சி அடைந்துள்ளன. உதாரணமாக ஒரு மூடை சீனியின் விலை 1275 ரூபாவாக இறங்கியுள்ளது.

இதே வேளை சின்னப்புதுக்குளம் தபாற்பெட்டிச் சந்திக்கும் குளச்சந்தைக்கும் இடையில் உள்ள சுமார் ¼ மைல் தூரத்தில் இருந்த இரண்டு சோதனை நிலையங்களும் அகற்றப்பட்டுவிட்டன. அதனால் தரகர் தொல்லையும் குறைந்துள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஏராளமான லொறிகள் குளச்சந்தைக்கு வருகின்றன. கடந்த வியாழக்கிழமை மட்டும் பத்துக்கும் மேற்பட்ட லொறிகள் அங்கிருந்து வந்து பொருள்களை விற்கக் காத்து நின்றன.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து வரும் லொறிகள் குளச்சந்தையிலேயே பொருள்களை வாங்கிச் செல்வதுண்டு.

(அ-164)

# பரந்தன் மிதி வெடியில் ஒருவர் பலி; ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 1
மிதிவெடியில் சிக்கி ஒருவர் மரணமானார். மற்றும் ஒருவர் காயம் அடைந்தார்.

பரந்தனில் வியாழக்கிழமை இச்சம்பவம் நடந்தது.

பரந்தனில் இராணுவத்தினர் விட்டுச் சென்ற இடங்களைத் துப்பரவு செய்து கொண்டிருந்த சமயம் இந்த விபத்து இடம் பெற்றது.

கிளிநொச்சி செல்வநகரைச் சேர்ந்த பழநிசந்திரசேகரன் [வயது 36] என்பவரே இறந்தவர் ஆவார்.

காயம் அடைந்தவர் செல்வாநகரைச் சேர்ந்த பெருமாள் கிட்டினன் [வயது 38]

# மரண அறிவித்தல்கள்

## இராமலிங்கம் நாகரத்தினம்

[மலாயன் பென்சனியர்]

வலிகாமம் மேற்கு சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. இராமலிங்கம் நாகரத்தினம் [மலாயன் பென்சனியர்] 30 - 08 - 90 இல் காலமானார். அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான திரு, திருமதி கண்ணப்பர் இராமலிங்கம் ஆகியோரின் அன்பு மகனும், திருமதி நாகேஸ்வரி வேலுப்பிள்ளை, டாக்டர் நாகேஸ்வரன் நாகரத்தினம், திருமதி பரமேஸ்வரி இராஜேந்திரா, திரு. பரமேஸ்வரன் நாகரத்தினம், காலஞ்சென்ற திருமதி புவனேஸ்வரி பத்மநாதன் ஆகியோரின் அன்புத்தந்தையும், திரு.செல்லத்துரை வேலுப்பிள்ளை, திருமதி இராஜேஸ்வரி நாகரத்தினம், காலஞ்சென்ற திரு. துரைச்சாமி இராஜேந்திரா, திருமதி லோஜினி நாகரத்தினம், டாக்டர். வி. செ. பத்மநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 30 - 08 - 90 வியாழக்கிழமை பிற்பகல் செம்மணி மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. பொன்னம்பலம்

நாயன்மார்கட்டு. [14122]

## பொன்னையா மகேந்திரம் (ஜப்பான்)

புகையிரத நிலைய அதிபர் (முருங்கன்)

கரவெட்டி கிழக்கு, கிழவிதோட்டத்தைச் சேர்ந்த பொன்னையா மகேந்திரம் (புகையிரத நிலைய அதிபர் - முருங்கன்) 28 - 08 - 90 ல் நெல்லியடியில் அகால மரணமானார்,

இவர் காலஞ் சென்ற திரு, திருமதி பொன்னையா, மாணிக்கம் ஆகியோரின் அன்பு மகனும், சின்னையா (எழுதுவினைஞர், கச்சேரி, யாழ்ப்பாணம்) பிரபல வர்த்தகர் சபாரத்தினம், மதுபாலசிங்கம், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், கிரிஜா, உமாகாந்தன், மஞ்சுளா, தனன்செயன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், வீரகத்தி சிவலிங்கம் (உதவி அரசாங்க அதிபர் - நானாட்டான்), வீ. சிவப்பிரகாசம் (கட்டட பரிசோதகர், கல்வித்திணைக்களம் - கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சி. வீரகத்தி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் மருமகனுமாவார்.

இவரது மரணச்சடங்குகள் 28 - 08 - 90 இல் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கிழவிதோட்டம்,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

தகவல்:
ம. ஜெயலட்சுமி.
(C/5181)

# பாலாவோடை நால்வர் காயம்

அராலி, செப். 1
காரைநகர் பாலாவோடையை நோக்கி முன்னேறிய படையினர் வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் நால்வர் காயம் அடைந்தனர்.

கடந்த 29 ஆம் திகதி புதன் கிழமை காலை இச்சம்பவம் நடந்து.

பாலாவோடையில் மேலும் சில வீடுகள் படையினரால் தீக்கிரையாக்கப்பட்டன என்று கூறப்படுகிறது.

[இ]

# நாளை கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 1
உடுவில் பிரதேச கிராமிய உற்பத்திக் குழுக்களின் இணைப்புக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது.

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுக்களின் அங்கத்தவர்கள், விவசாய, தொழில்நுட்ப, கூட்டுறவு அலுவலர்கள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

# ஜேர்மனிகள் இணையும் உடன்படிக்கை

பெர்லின், செப். 1
இரண்டுஜேர்மனிகளும் ஒன்றாக இணையும் இறுதி உடன்படிக்கை நேற்று கைச்சாத்திடப்பட்டது.

கிழக்கு, மேற்கு ஜேர்மனிகளின் பிரதமர்கள் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

எதிர்வரும் அக்டோபர் 3ஆம் திகதியில் இருந்து ஐக்கிய ஜேர்மனி என்ற ஒரு நாடே உலகில் இயங்க இந்த உடன்படிக்கை வழி செய்கிறது.

(ஒ-எ)

# பொறிவெடிகளில் சிக்கி படையினர் 4 பேர் கால் இழப்பு

கிழக்கில் விடுதலைப் புலிகளின் பொறி வெடிகளில் சிக்கி நான்கு படையினர் கால்களை இழந்திருப்பதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

கடந்த புதனன்று அம்பாறையில் றூபக்குளத்திலும் வியாழனன்று திருகோணமலை மாவட்டம் ஈச்சிலம்பத்தையிலும் ஒவ்வொரு சிப்பாய்கள் கால்களை இழந்தனர்.

மூதூர் கேணியடியில்நேற்று மிதிவெடியில் சிக்கி இரு சிப்பாய்கள் கால்களை இழந்தனர்.

[உ]

# சுன்னாகம் சந்தையில் ஹெலியிலிருந்து தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 1
சுன்னாகத்தில் நேற்று இடம்பெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதலில் பலர் காயம் அடைந்தனர்.

சுன்னாகம் சந்தையில் காலை 10 மணியளவில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கூடியிருந்த சமயம் ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த சுன்னாகத்தைச் சேர்ந்த தம்பையா கனசசபாபதி (வயது 59), இராசேஸ்வரி இராசா (வயது 38) ஆகியோர் மானிப்பாய், யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

(இ-51)

# ஷெல்லுக்கு ஒருவர் பலி இருவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 1
மண்டைதீவிலிருந்து நேற்று மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் யாழ். கொட்டடியில் ஒருவர் மரணமானார். இருவர்படுகாயமடைந்தனர்.

மணியம் தோட்டத்தைச் சேர்ந்த பாலன் (வயது 28) என்பவரே இறந்தவர் ஆவார்

கந்தையா யோகநாதன் (வயது 30)செல்வா இராசசேகரன் (வயது 28) ஆகியோர் காயம் அடைந்தனர்.

(இ-15)

# நாவற்குழியிலும் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், செப். 1
நாவற்குழிப் பகுதியிலும் நேற்று மாலை குண்டு வீசப்பட்டது.

நகரில் தாக்குதல் நடத்தி விட்டுச் சென்ற அவ்ரோ விமானமே இப்பகுதியில் பீப்பாக் குண்டு ஒன்றைப் போட்டது.

நாவற்குழி சண்டி வீதியில் அமைந்துள்ள சத்தியசாயி பாபா சமித்தி கட்டடத்திற்கு சமீபமாக வீதிக்கு அருகே விழுந்த குண்டு வெடிக்கவில்லை. அந்தக் குண்டு பிளந்தநிலையில் காணப்பட்டது.

[ஒ-6]

## செஞ்சிலுவை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
முயற்சியைக் கைவிட்டது.

அப்பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும்—

அதனால் செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் அங்கு செல்ல அனுமதிக்க முடியாது என்றும்—

கொழும்பில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் தலைமை அலுவலகம் ஊடாக அறிவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-5)

## அவ்ரோ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
குண்டுகளைப் போட்டது.

கன்னாதிட்டி காளிகோவில் குளத்தில் விழுந்து வெடித்த குண்டுகளினால் அப் பகுதியிலுள்ள சில வீடுகளின் கூரைகள் சேதமடைந்தன.

இப் பகுதியை இலக்கு வைத்து இதற்கு முன்னர் பல தடவைகள் பொம்மர் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-5)

## தமிழகத்துக்கு அகதிகளாக---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ளனர். இந்த வகையில் பல நாட்களின் பின்னரும் இன்னும் சுமார் 300 பேர் விடுவிக்கப்படாமல் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்,

அவர்களின் மனைவி, பிள்ளைகளும், பெற்றோருமே என்ன செய்வது என்று தெரியாமல் பேசாலைக்கும் தலைமன்னாருக்கும் இடையில் அகப்பட்ட இடங்களில் தங்கி அவதிப்படுகின்றார்கள்.

தங்கள் கணவருக்கு அல்லது பிள்ளைக்கு என்ன நடக்குமோ என்ற கவலையுடன் குடும்பப் பெண்கள் பலரும், ஒரு மாத காலத்திற்கும் மேலாக வாழ்க்கையில்வெறுப்படைந்த நிலையில் காணப்படுகிறார்கள்.

ஆதரவளிக்க உறவினர்கள் எவருமே பேசாலையில் இல்லாத நிலையில், தாம் கையில் கொண்டு சென்ற கைச்செலவுக்குரிய பணத்தையும் முடித்துவிட்டு, இப்போது சாப்பாட்டுக்கும் வழியில்லாமல் சஷ்டப்படுகிறார்கள்.

பனந்தோப்புகளில் கிடக்கும் பனம்பழங்களைச் சேகரித்து அவர்கள் உண்பதை நேரில் காணக்கூடியதாக இருந்தது.

இவ்வாறு கஷ்டப்படுவதை விட உங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பலாமே; அல்லது மடுவுக்குச் சென்று அகதிமுகாமில் தங்கலாமே என்று உதயன் செய்தியாளர் கேட்டபோது--

எங்கள் கணவரை, எங்கள் பிள்ளையை தவிக்க விட்டு விட்டு, அவர்களுக்கு என்ன ஆகுமோ என்பது தெரியாமல், நாம் எப்படி இந்த இடத்தை விட்டு செல்வது என்று பெண்கள் அவலக்குரல் எழுப்பியது மனதை நெகிழ வைத்தது.

அவர்களை ஓநாய்களிடம் விட்டுவிட்டு நாம் எப்படிச் செல்வது? சென்று எங்ஙனம் வாழ்வது? என்றும் அவர்கள் கண்ணீர் சிந்தியபடி தலையில் அடித்துக்கொண்டு அழுதார்கள்.

(அ-164)

## யாழ். அன்னை,,.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ருந்து காப்பாற்றுமாறும் -

மருந்து வகைகளை அனுப்பி அகால மரணங்களை தவிர்க்க நடவடிக்கை எடுக்குமாறும் -

அன்னையர் முன்னணி நேற்று வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ)

## ஈழத்தில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வாய்ப்புக்களை வழங்கும் யோசனை பற்றி பரிசீலிக்கப்படும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை—

தமிழகத்தில் 250 முகாம்களில் 97ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கிஇருப்பதாக அமைச்சர் நாஞ்சில் மனோகரன் சொன்னார்.

(உ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 01-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org